# பெண்கள் மத்தியில் வீட்டு வன்முறைகளின் தாக்கங்கள்: கொழும்புப் பிரதேசத்தில் பஸ்ஹ் விவாகரத்து பெற்ற முஸ்லிம் பெண்களிடையிலான ஆய்வு

**எல்.எப். ஹில்மா & எம்.ஐ.எம். ஜெஸீல்**
**இஸ்லாமிய கற்கைகள் துறை**
**இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடம்**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**

Correspondence: jazeelmi@seu.ac.lk

**ஆய்வு சுருக்கம்:**

*உலகளவில் வன்முறை சம்பவங்களில் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைகள் மிக அதிகமாகும். இதனால் பெண்கள் பல பாதிப்புக்களை அனுபவிக்கின்றனர். பிரத்தியேக சூழலமைவைக் கொண்ட தலைநகர் கொழும்புப் பிரதேசத்தில் வன்முறை சம்பவங்கள் ஒப்பீட்டளவில் அதிகம். இஸ்லாமிய மார்க்கம் வன்முறையற்ற குடும்பத்தை கட்டியெழுப்ப பல வழிகாட்டல்களைப் போதித்துள்ளது. இருந்தபோதிலும் முஸ்லிம் குடும்பங்களில் இவ்வாறான வீட்டு வன்முறைகள் இடம் பெறுவது முஸ்லிம் பெண்கள் மத்தியிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்நிலையில் இவ் ஆய்வானது கொழும்புப் பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் நிகழும் வீட்டு வன்முறைகளையும், அதனால் அப்பெண்கள் எதிர்கொள்ளும் பாதிப்புக்களைக் கண்டறிவதை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. அளவு ரீதியான ஆய்வு முறையினைக் கொண்ட இவ்வாய்வு முதலாம் நிலைத் தரவுகளின் பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டது. இந்தவகையில் கொழும்பு பிரதேசத'தில் 2018, 2019 ஆம் ஆண்டுகளில் குடும்ப வன்முறைக் காரணமாக பஸ்ஹ் விவாகரத்துப் பெற்ற 100 முஸ்லிம் பெண்களிடம் வினாக்கொத்துக்கள் விநியோகிக்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. இதுதவிர, காழி நீதிமன்ற ஆவணங்கள், பதிவுகள் பகுப்பாய்விற்கு உற்படுத்தப்பட்டன. உடல், உள, பொருளாதார, பாலியல் மற்றும் வாய்மொழி வகை சார்ந்த வன்முறைகளுக்கு ஆளாக்கப்பட்டுள்ள பல முஸ்லிம் பெண்களில் அதிகமானோர் தனிமனித, குடும்ப மற்றும் சமூக மட்டத்தில் பௌதீக, உளவியல், பொருளாதார ரீதியில் பாதிப்படைந்துள்ளனர் என்பது பிராதான கண்டறிதலாகும். இந்த வகையில் பெரும்பான்மையினர் (58%) உளவியல் ரீதியிலும் கனிசமானோர் (31%) உடலியல் ரீதியிலும் சிலர் (9%) பொருளாதார ரீதியிலும் வெகுசிலர் (2%) பாலியல் ரீதியிலும் பாதிப்புக்கு உட்பட்டுள்ளனர். உடலியற் காயங்கள், பொருளாதார பின்னடைவு, சமூக புறக்கணிப்பு என்பனவாகவும் பாரியளவில் உளவியல் பிரச்சினையாகவும் வன்முறை தாக்கங்கள் பரிணமிக்கின்றது. அவற்றுள் குடும்ப சிதைவு அதன் ஈண்டுகுறிப்பிடத்தக்க விளைவாகவுள்ளது. பல பெண்கள் பஸ்ஹ் விவாகரத்துக்கு விண்ணப்பித்து அவர்களில் கனிசமானோர் மணவிலக்குப் பெற்றுள்ளனர். பெண் உரிமை காத்தல், வீட்டு வன்முறைகள் ஒழித்தல், முஸ்லிம் குடும்பங்களின் நிலை மேம்பாட்டு செயற்திட்டங்களுக்கு இவ்வாய்வு போதிய தகவல்களை வழங்கி துணைப் புரியவல்லது இவ்வாய்வு.*

**பிரதான சொற்கள்:** *வீட்டு வன்முறைகள், வன்முறைத் தாக்கங்கள், முஸ்லிம் பெண்கள், பஸ்ஹ் விவாகரத்து*

## 1. ஆய்வுப் பின்னணி

*இன்றைய உலகில் பல்வேறு பட்ட வன்முறைகளுள் குடும்பங்களுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகளின் அத்துமீறல் வீட்டு வன்முறை என்று பொதுவாகக் கொள்ளலாம். இது குடும்ப வன்முறை, கூட்டாளர் வன்முறை, உள்ளக வன்முறை என்ற பெயர்களிலும் வழங்கப்படுகிறது* (United State Attorney, 1998). *கணவன், மனைவி மீது அல்லது மனைவி கணவன் மீது செலுத்தும் அத்துமீறல்களாக அமையப்பெறும் இவ்வகை வன்முறையகளுள் பெண்களுக்கு எதிரானதைக் குறிக்க ஏற்றுக் கொள்ளப்பட்ட சரியான சொல்பிரயோக வரையறை போதாமை அது பற்றிய ஆராய்ச்சிகள் தொடர்வதற்கு வழிசெய்துள்ளது எனலாம். அந்தவகையில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்காக ஐக்கிய நாடுகளின் பிரகடனமானது இவ்வகை வன்முறையை*

பின்வருமாறு வரையறுத்துள்ளது. பெண்களின் பொது அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் நிகழக் கூடிய உடல், பாலியல் அல்லது உளவியல் ரீதியான தீங்குகள் அல்லது துன்பங்களை விளைவிக்கும் செயல்கள், வற்புறுத்தல்கள் வன்முறை ஆகும் (UNICEF, 2000).

பெண்களுக்கு எதிரான வன்முறை அவர்களை அடிபணிந்த நிலைக்கு தள்ளப்படும் சமூக வழிமுறைகளில் ஒன்றாகும் (Dukess, 2006). இது நெருங்கிய கூட்டாளர்களால் (Intimate Partner) நிகழ்த்தப்படும் உடலியல், உளவியல், பாலியல், பொருளாதார, வாய்மொழி மற்றும் உணர்ச்சி ரீதியிலான வன்முறைகளாகும் (றியால், 2014). அதிகாரத்தின் மூலம் தோற்றம் பெறும் வன்முறையானது பலவீனமானவரை அடக்கும் நிலையை ஏற்படுத்தும் (தினகரன், 2018). ஆரம்ப காலம் தொட்டே பெண்களை ஏதோ ஒரு வகையில் வன்முறைக்கு உற்படுத்தப்பட்டு வந்துள்ளனர் எனக் கருதலாம். புரானங்களிலும், பண்டைய நாகரிகங்களிலும் பெண்ணை இழிவாகவும், அடிமையாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளமை (றியால், 2012) இதனை உணர்த்துகின்றது. ஆரம்பகால ரோமானிய, கிறிஸ்தவம், ஆங்கிலப் பொதுச்சட்டம் மற்றும் அமெரிக்க குடியேற்றவாசிகள் போன்றோர் பெண்ணை தமது சொத்தாக கருதி தண்டிப்பதற்குரிய அதிகாரத்தை பெற்றிருந்தனர என்ற பின்னணியிலே வீட்டு வன்முறை தோற்றம் கண்டது (பெண்கள் வாரியம், 2019).

உலக சுகாதார நிலையத்தின் தகவலின் படி, உலகில் 35% இற்கு அதிகமான பெண்கள் தன் வாழ்நாளில் உடலியல் அல்லது பாலியல் ரீதியில் வன்முறைக்குற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ளனர். இன்னும் சர்வதேச பெண்களில் 70% வீதத்தினர் ஒரு முறையாவது தன் நெருக்கமான கூட்டாளரால் வன்முறைக்குள்ளாகியுள்ளார்கள் என கண்டறியப்பட்டுள்ளது (UN Women, 2019). ஐக்கிய நாடுகளின் அறிக்கை உலகில் மூன்று பெண்களில் ஒருவர் தன் வாழ்நாளில் அடிக்கப்பட்டோ, வன்முறைக்குற்படுத்தப்பட்டோ, வற்புறுத்தப்பட்டோ அல்லது பிற வகையிலோ துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுகின்றனர் எனக் கூறியுள்ளது (Dukess, 2006; தினகரன், 2018). இதன் காரணமாக உலகில் 35- 40% பெண்கள் தற்கொலை முயற்சி செய்கின்றனர் அதேவேளை அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடையா ஆகிய இருவகை நாடுகளிலும் இந்நிலையே காணப்படுகின்றது (UNICEF, 2000). இவ்வகையான வன்முறைகளின் மூலம் பெண்கள் உடலியல், உளவியல், பாலியல் ரீதியான பல நோய்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர் (WHO, 2017). இது நாளுக்கு நாள் அதிகரித்து செல்வதாகவும் ஐக்கிய நாடுகள் சபை அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது (UN women, 2019).

1600களின் நடுப்பகுதியில் மனைவியை அடிப்பதை கட்டுப்படுத்துகின்ற சட்டங்கள் முதன் முதலில் இயற்றப்பட்டன என்றபோதிலும் 1800களின் பிற்பகுதியில் வீட்டு வன்முறைகளைக் கட்டுப்படுத்துகின்ற சட்டங்கள் அமுலில் இருந்தன (Huecker, 2019). பெண்களுக்கு எதிரான அனைத்து வித வன்முறைகளை வெளி உலகிற்கு காட்டி அதற்கான நியாயமான, தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்காகவும் சர்வதேச மகளிர் தினம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு சர்வதேச தினம் என்பன பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை 1999 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மாநாட்டின் தீர்மானத்துக்கு அமைவாக பெண்களுக்கெதிரான அனைத்துலக வன்முறை ஒழிப்பு நாள் ஆண்டு தோறும் நவம்பர் 25 ஆம் திகதியில் உலகெங்கிலும் கொண்டாடப்படுகின்றது (UN women, 2019). பெண்களின் உரிமைகள் பறிக்கப்படும் போது அது மனித உரிமை மீறலாக கொள்ளப்பட்டு, அதற்காக தண்டனைகள் பெற்றுக் கொடுக்க முடியும் எனவும் கருதப்பட்டது. (வீரமத்ரி, 1999). பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், வன்முறைகளிலிருந்து அவர்களை காப்பாற்றவும் பல அமைப்புகள் எந்நேரமும் எல்லா நாடுகளிலும் இயங்கிக் கொண்டுள்ளன (Dukess, 2006; UN women, 2019). மேலும் பல நாடுகளிலும் வன்முறைகளுக்கான காரணங்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இதன் மூலமும் குடும்ப வன்முறைகளைத் தடுக்க முடியும் எனக் கருதப்படுகின்றது.

ஆண்களின் உடலில் சுரக்கப்படும் உயிரியல் காரணிகளும் (றியால், 2014), மனித உணர்வுகள் உருவாகின்ற உளவியல் காரணிகளும் (Darrell & Linda, 2009), இதனால் உருவாகும் ஏனைய பொதுக் காரணிகளும் (Marjie, 2015) வன்முறையை தோற்றுவிக்கின்றன. அத்துடன் வன்முறையானது உடலியல், உளவியல், பாலியல், பொருளாதார, வாய்மொழி மற்றும் நடத்தைக்

கட்டுப்பாடு போன்ற வடிவங்களில் அமையப் பெறுகின்றன (Youth law, 2019, Arizona Coalition, 2019, Roxanne, 2019, Gawenneth & Robert 2003, Melinda, 2019). இவற்றில் உடலியல், பாலியல் வன்முறைகள் காயத்தை ஏற்படுத்துவதும், நோவினையைத் தரக் கூடியதுமாக அமையும் (WHO, 2005). உளவியல், வாய்மொழி மற்றும் நடத்தைக் கட்டுப்பாடு என்பன மன ரீதியில் கவலையை தரக் கூடியதாக அமையும் (Maria, & Alfonso, 2006). பொருளாதார வன்முறையானது அவர்களின் முன்னேற்றத்தை தடைவிதிக்கின்றனவாக அமைகின்றது (Unicef, 2000).

வீட்டு வன்முறையானது பெரும்பாலும் அதிகரித்து வருகின்றமையால் அதன் விளைவுகளும் தாக்கங்களும் பரந்த மட்டத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதைக் காண முடிகின்றது. இது பாதிக்கப்பட்டவருடன் மட்டுப்படுத்தப்பட்ட விடயமல்ல. பாதிக்கப்பட்ட ஒருவர் தனது தனிப்பட்ட வாழ்க்கை முறையில் உடலியல், உளவியல், பொருளாதார மற்றும் சமூக அடிப்படையில் பல பாதிப்புக்களையும், விளைவுகளையும் சந்திக்க வேண்டியுள்ளது (WHO, 2005, றியால், 2014). பாதிக்கப்பட்டவரின் உடலியல் ரீதியான காயங்கள், நோய்கள், தழும்புகள் என்பவற்றை உதாரணமாகக் கொள்ளலாம் (Unicef, 2000, WHO, 2017). உடலளவில் எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்துகின்றதோ அதுபோல உள ரீதியிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. உள நோய்களுக்கு ஆளாக்கப்படுவதோடு அதன் மூலம் பல நெருக்கடிற்கும், மன வடுவிற்கும் ஆளாகின்றனர. (Maria & Alfonso, 2006, unicef, 2000). வீட்டு வன்முறைக்கு உற்படுத்தப்பட்ட நபரின் குழந்தைகள் மற்றும் ஏனைய குடும்ப உறவுகளும் உடல், உள, சமூக மற்றும் பொருளாதார ரீதியில் பாதிப்பை அனுபவிக்கின்றனர் (றியால், 2014, Sternberg, 1993). குறிப்பாக பிள்ளைகளின் உளநிலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது (unicef, 2006, Life line, 2016), (Sternberg, 1993). அத்துடன் ஏனைய குடும்ப அங்கத்தவர்களும் சமூக அமைப்பில் பல பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது (Life line, 2016). வீட்டு வன்முறை சமூகத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் பாரிய நோயாகும். சமூக செயற்பாடுகளில் பாதிப்பை விளைவிக்கும் இவ்வகையான வன்முறைகள் மிகவும் ஆபத்தானது (Marjie, 2015). சமூக மட்டத்தில் கலாசார, பண்பாட்டு, ஒழுக்கம் சார்ந்த விடயங்களில் நெறிபிறழ்வுகள் ஏற்படுகின்றன. இவற்றை கட்டுப்படுத்த முடியாமல் உள்ளதால் அது நாட்டினுடைய அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் பின்தங்கிய நிலையை ஏற்படுத்தகின்றது (Malinda, 2019).

உலக நாடுகளைப் போல இலங்கையிலும் வீட்டு வன்முறைகள் இடம் பெறுகின்றன எனலாம். இந்த வகையில் இலங்கைப் பெண்களில் கணிசமானோர் இனம், மதம் வேறுபாடுகள் இன்றி குடும்ப வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக இளம் வயது தம்பதிகள் மத்தியில் அவற்றின் நிகழ்வு நாளுக்கு நாள் அதிகரிக்கரித்து செல்கின்றனமையால் அநேகமானோர் பாதிக்கப்படுகின்றனர் (பத்மினி, 2001). மேலும் இலங்கையில் வீட்டு வன்முறைகள் அவற்றின் பாதிப்புக்கள் பல்வேறு விதமாய் அமைகின்றன. இலங்கையைப் பொருத்தவரையில் உடல் ரீதியானவை, நடத்தைக் கட்டுப்பாடுகள், உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகங்கள் என அவற்றின் வடிவம் பெருமளவில் காணப்படுகிறது. பாலியல் ரீதியான குடும்ப துஷ்பிரயோகம் என்பது இங்கு ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளன. மேலும் பலர் தாம் வன்முறைக்கு உட்பட்டுள்ளோம் என்பதையும், தாம் செய்வது பெண்களுக்கு எதிரான வன்முறைகள் என்பதையும் அறியாதவர்களாக உள்ளனர். இதனால் குடும்ப வன்முறைக்கு எதிராக பெண்கள் முறைப்பாடுகள் பதிவாகுவதில்லை. 60 வீதமான இலங்கைப் பெண்கள் இவ்வாறான குடும்ப வன்முறைக்கு உள்ளாகின்றனர் என்பதன் அடிப்படையில் இலங்கையில் ஐந்து பெண்களில் மூவர் வன்முறைக்குள்ளாகின்றனர் (வத்சலா, 2001). தாக்குவதற்காக விறகு, சமையலறைக் கத்திகள், குச்சிகள், தும்புத்தடி மற்றும் இதுபோல இன்னும் சில உபகரணங்கள் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக ஒவ்வொரு மாதமும் 4000 வழக்குகள் பதியப்படுவதாவும் அது இன்னும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாகவும் கண்டறியப்பட்டுள்ளது (Achini, 2010).

இலங்கையில் 2005 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வீட்டு வன்முறை தொடர்பான சட்டங்கள் இயற்றப்படவில்லை. 1998, 1999 காலப்பகுதியில் வீட்டு வன்முறை தொடர்பில் தனியானதொரு சட்டம் இயற்றப்பட முன்மொழிவுகள் இடம் பெற்றன (ரமீஸ், 2019). 2005 ஆம்

ஆண்டு 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 23 இன் 14 ஆம் அத்தியாயத்தில் துஷ்பிரயோகம் என்பது வரையறுக்கப்பட்டுள்ளது (Violence Act, 2005). இலங்கையில் பாதிக்கப்படும் பெண்களில் குறைந்த வீதமானோர் மட்டுமே குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கைகளை பெற்றுக் கொள்கின்றனர் (மாஜிதா, 2002). குறிப்பாக கணிசமான குடும்பங்கள் வாழும் பிரத்தியாக சூழமைவில் தலைநகரப் பிரதேசமான கொழும்பில் இந்த வன்முறைக் கலாசாரத்தின் தாக்கம் வலுவானதும் அது அதிகளவு விவாகரத்துக்கள் பதியப்படுவதற்கு ஏதுவாகின்றது. அந்தவகையில் இன, மத, பேதம் இன்றி பல குடும்பங்களிலும் பல்வேறு வகையிலும் முரண்பாடுகள் உருவாகி அது பெண்கள் மீதான அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகிறது என்கிறார் வத்சலா ஜெயசூரிய (2011). இலங்கை முஸ்லிம் பெண்கள் தொடர்பான கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டாலும் (Sailan Muslim, 2010) முஸ்லிம் பெண்கள் அனுபவிக்கும் வீட்டு வன்முறைகள் பற்றியும், அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றியும் போதிய பதிவுகள் இல்லை. பல் கலாசார சூழலைக் கொண்ட கொழும்புப் பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் விவாகரத்துக்கு இட்டுச்செல்வதாகவும் அதன் எண்ணிக்கை வருடா வருடம் அதிகரித்துசெல்வதாகவும் காழி நீதிமன்ற பதிவுகள் உணர்த்துகின்றன. இந்நிலையில் இப்பிரதேசமானது அதிகளவு பஸ்ஹ் விவாகரத்துக்கள் பதியப்படும் இடமாக உள்ளது (பௌசுல், 2015). இப்பின்னணியில் கொழும்புப் பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் நிகழும் வீட்டு வன்முறைகள், அவை ஏற்படுத்தும் தாக்கங்களை பரிசீலிக்க இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. ஆய்வு முறை

இவ்வாய்வானது கொழும்புப் பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் இடம் பெறும் குடும்ப வன்முறைகளையும் அதனால் அப்பெண்கள் எதிர்கொள்ளும் பாதிப்புக்களையும் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நோக்கத்தை அடைந்துக் கொள்ளும் பொருட்டு அளவு ரீதியிலான ஆய்வு முறையினைக் கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. முதலாம் நிலைத் தரவுகளுக்காக கொழும்பு பிரதேச முஸ்லிம் குடும்பங்களின் 2018 மற்றும் 2019 வரையான ஆண்டுகளில் முடிவடைந்த 202 பஸ்ஹ் விவாகரத்துக்களிலிருந்து குடும்ப வன்முறைக் காரணமாக பஸ்ஹ் விவாகரத்துப் பெற்ற 100 முஸ்லிம் பெண்கள் ஆய்வின் மாதிரிகளாக எழுமாராக தெரிவு செய்யப்பட்டனர். கொழும்பு பிரதேசத்தில் கணிசமானளவு முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் அளவையல் வினாக்கொத்துக்கள் விநியோகிகப்பட்டு தரவுகள் பெறப்பட்டு MS office exel பகுப்பாய்விற்கு உற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இவ்வாய்விற்கு தேவையான மேலதிக விபரங்களும் குருக்குவெட்டு தகவல்களும் காழி நீதிமன்ற ஆவணங்கள், பதிவுப் புத்தகங்கள் என்பனவற்றை மீளாய்வுக்கு உடபடுத்திப் பெறப்பட்டது.

## 3. கலந்துரையாடல்களும் கண்டறிதல்களும்

இலங்கையில் குடும்ப வன்முறைகளும், பெண்கள் மீதான அதன் தாக்கங்களும் நாளடைவில் அதிகரித்து வரும் சூழலில் வீட்டிலோ, வீதியிலோ, வேலைத் தளத்திலோ அல்லது ஏதாவது ஒரு வகையிலோ வன்முறைக்கு உற்படுத்தப்படக் கூடும் என்ற அச்சத்துடனும் ஒவ்வொரு சமூகத்தையும் சேர்ந்த இலங்கைப் பெண்கள் இருக்கின்றனர் (கமலினி, 2001). வன்முறைகள் தோற்றம் பெற சமூக சூழல் மிக முக்கிய காரணியாக அமையும் (றியால், 2014) என்பதற்கமைய தலைநகரப் பிரதேசதான கொழும்பின் பிரத்தியோக பண்புகள் அதிகளவான வன்முறைச் சம்பவங்கள் இடம் பெறுவதுக்கு ஏதுவான காரணிகளைக் கொண்டமைந்தது (Marjie, 2015). அதிக நெருக்கடியும், அடர்த்தியான சனத் தொகையையும் கொண்ட கொழும்புப் பிரதேசத்தின் நகர்ப்புற வாழ்வு இவ்வாறான வன்முறையைத் தோற்றுவிப்பதற்கு ஏதுவான சூழலாக அமைந்துவிடுகிறது. இங்கு வாழும் பெரும்பாலான மக்களிடையே காணப்படும் பழு நிறைந்த வாழ்க்கை முறை அவர்களின் உடல், உள மற்றும் சமூக மட்டத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அது சில சமயம் அவர்களை வன்முறையாளர்களாக உருவாக்கவல்லது. கொழும்பு மாநகர சபையின் பிரதான குடியிருப்பாளராக உள்ள முஸ்லிம்கள் மேற்சொன்ன சூழல் தாக்கத்திக்கு உட்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். முஸ்லிம் பிரதேசங்களும் முஸ்லிம் வாழ்வியலும்


நெருக்கடிமிக்க நகர்புற வாழ்வின் கூறுகளுக்கு பெரிதும் உட்பட்டே அமையப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. நகர வாழ்வு தோற்றுவிக்கும் சமூக தாக்கமும் கொழும்பு முஸ்லிம்கள் மீது வலுவாகவே உள்ளது எனலாம். ஏனெனில் மனிதன் சமூகத்துடன் ஒன்றி வாழ்வதால் இவ்வாறான சமூக நிலைகள் அவனது உடல், உள, கலாசார மற்றும் எல்லா செயற்பாடுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. அவனது எல்லா நிலைகளினதும் வெளிப்பாடுகள் சமூக காரணிகளிலே தங்கி நிற்கிறது. பல் கலாசார சூழலைக் கொண்ட கொழும்புப் பிரதேசமானது முஸ்லிம்களிடத்தில் சமூக ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்த ஏதுவாக அமைந்துள்ளது என கருதலாம். அங்குள்ள குடியிருப்பு மற்றும் வீடமைப்பு முறை, பல் கலாசார சூழல், சமூகமயமாக்கல் சிந்தனை, நவீன வசதிகள், தொழில் நெருக்கடி, அதிகரித்த வாழ்க்கை செலவுகள், போன்றன அவர்களிடத்தில் வாழ்க்கை முறையில் செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளன.

முன்னைய ஆய்வுகள் மூலம் அடையாளப்படுத்தபட்டுள்ள போதைப் பொருள் பாவணை, தவறான உறவு, ஆணாதிக்கம், பொருளாதாரப் பிரச்சினைகள், தலைமுறை இடைவெளி, உணர்வுச் சிக்கல், தொடர்பு சாதனங்களின் பாவணை, சீதனம், திருமணத்திற்கு முன்னுள்ள வாழ்க்கையின் நிலை, பாலியல் அதிருப்தி போன்ற காரணங்களே (Roxanne, 2019; றியால், 2014; ஹில்பான், *2016*; Darrell & Linda, 2009).

வினாக்கொத்தின் மூலம் கிடைக்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு மிகப் பெரும்பான்மை முஸ்லிம் பெண்கள் (76%) கடுமையாக உளவியல் ரீதியில் தாக்கப்பட்டுள்ளனர் என காண்பிக்கின்றது. இந்த பெண்கள் மீதான குடும்ப வன்முறைகளை இத்துறை சார்ந்த ஆய்வுகள் (Roxanne, 2019; Gawenneth & Robert 2003; றியால், 2014; Youth law, 2019; WHO; 2005; Unicef, 2000) வரையறுக்கும் உளவியல் ரீதியான வன்முறை வடிவங்களாக வகைப்படுத்த முடியும். இந்தவகையில் உணர்ச்சி ரீதியாக தீங்கு அல்லது இழப்பை ஏற்படுத்தும் வகையில் நேரடியான அச்சுறுத்தல், குற்றம் சாட்டுதல், கூட்டாளரை உறவை விட்டும் வெளியேற்றல், சமூக ரீதியாக தனிமைப்படுத்துதல் என்பன இப்பெண்களுக்கு இடம் பெற்றுள்ளன. பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைகளில் மூல காரணிகளில் ஒன்றான அவர்களை நிந்திக்கும், மானபங்கம் செய்யும் அல்லது சுயமரியாதைக்கு இழுக்கான வார்த்தைப் பிரயோகங்கள் இங்கு பெருமளவில் இடம்பெற்றுள்ளன. 'சகித்துக் கொள்ள சிரமமான தூசன வார்த்தைக் கொண்டு கடுமையாக பிறர் முன்னிலையில் தாம் ஏசப்பட்டுள்ளதாகவும் இதனால் அயலவர் முன் செல்வதற்கே மிக வெட்கப்படுவதாகவும்' தெரிவிப்பவர்களாக உள்ளனர். மேலும் கனிசமான பெண்கள் (38%) இன்னொரு அன்னிய ஆணுடன் கள்ளத் தொடர்புப்படுத்தி அவதூறு செய்யப்பட்டுள்ளதன மூலம் அவமானப்படுத்டதப்பட்டுள்ளனர். இவ்வாறே சுமார் மூன்றில் ஒரு பகுதி (31%) பெண்கள் தமது கணவர்களால் பல சந்தர்ப்பங்களில் மிரட்டப்பட்டு பயமுறுத்தப்பட்டுள்ளனர். இவை தவிர மறைமுகமாக பயமுறுத்தல், குற்ற உணர்ச்சியை ஏற்படுத்தல், வேலையாள் போல் நடத்துதல், தனது நண்பர்களையும், உறவினர்களையும் பார்க்க விடாது தடுத்தல், தாம் சார்ந்த குடும்ப பின்னணியை பழித்துரைத்தல், கொலை செய்துவிடுவதாக அச்சுறுத்தல் என்பன மூலமும் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறே கனிமான பெண்கள் (29%) ஆண்களின் புறக்கணிப்பு, உதாசீனம், வெறுப்பு வார்த்தை, சந்தேகப்படல் என்பனவற்றுக்கும் உள்ளாகியுள்ளனர் என தரவுகள் காண்பிக்கின்றன. தௌகி போன்றோர் (Douki et al, 2003) சுட்டிக்காட்டுவது போல் இவ்வன்முறை வடிவங்கள் பெண்களுக்கு உளவியல் ரீதியாக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது மட்டுமல்லாது சமூக ரீதியாகவும் தாக்கத்தை தோற்றுவிக்காமலில்லை. இதன் விளைவாக கவலை, வெறுப்பு, மன அழுத்தம், விரக்தி, பதகளிப்பு, அதீத பயம், உறுதியற்ற உறவு நிலை, மனச்சோர்வு, தாழ்வு மனப்பான்மை போன்றன அவர்களுக்கு ஏற்பட்டுள்ளன. அவர்களுள் சிலர் மன அழுத்தம் காரணமாக தற்கொலை முயற்சியையும் மேற்கொண்டும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது ஜீன் (Jeanne, 2006) மற்றும் க்வென்னத் (Gwenneth, 2003) ஆகியோரின் ஆய்வுகளின் முடிவிற்கு ஒத்துள்ளது. அது மட்டுமல்லாது உடலியல், வாய்மொழி, பாலியல் மற்றும் பொருளாதார ரீதியிலான எல்லா வன்முறைகளும் பெண்ணிகளை உளவியலை ரீதியாக தாக்கக் கூடியதாகவும் அமைந்துள்ளது என்பது நோக்கத்தக்கது.

தலைநகர் கொழும்பில் முஸ்லிம் பெண்கள் மீதான உடல் ரீதியான குடும்ப வன்முறைகளின் தாக்கம் ஈண்டு சொல்லத்தக்கது. உலக சுகாதார அமைப்பு (WHO, 2005), இளைஞர் சட்டம் (Youth law, *2019*) போன்ற ஆய்வறிக்கைகள் எடுத்துக்காட்டுவதற்கு ஏற்ப இந்த வன்முறைகள் துன்புறுத்தப்பட்ட அப்பெண்களுக்கு உடல் ரீதியாக உணரக்கூடிய வலியையும் வேறு சில ஆய்வுகள் வரையறுக்கும் (Arizona Coalition, 2019; Unicef, 2000) காயத்தையும் ஏற்படுத்தியுள்ளன. ஆய்விற்குறப்படுத்தப்பட்ட பெண்களுள் பெரும்பான்மையினர் (53%) தம் கணவனால் கையால் அடித்தல், காலால் உதைத்தல் ஆகியவாறு துன்புறுத்தப்பட்டுள்ளனர். இது அவர்களை காயப்படுத்திதுடன் அதன் வேதனை பல நாட்கள் தொடர்ந்துள்ளது. அத்தோடு கனிசமான பெண்கள் (28%) பொருட்கள், ஆயுதங்கள் கொண்டும் தாக்கப்பட்டுள்ளனர். இது தவிர அசினி (Achini, 2010) இன் ஆய்வில் கண்டறியப்பட்டதைப் போல கையில் கிடைக்கும் பொருட்களை வீசி அடித்தல், கம்பு, சமையல் கத்தி, தும்புத்தடி மற்றும் இடுப்புப்பட்டி (Belt) என்பவற்றைக் கொண்டு தாக்கி துன்புறுத்துதலும் இடம்பெற்றுள்ளது என்பது தரவுப் பகுப்பாய்வு காண்பிக்கின்றது. கர்ப்ப காலத்திலும் கூட சில பெண்கள் இத்தகைய வன்முறைகளுக்கு அல்லது தள்ளிவிடுதல் போன்ற தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது வன்முறையின் விபரீத்தை வெளிப்படுத்தவல்லது. சில பெண்கள் (12%) தமது கணவனால் கை, கால், கழுத்து நெறிக்கப்பட்டும் வன்முறைக்கு உற்படுத்தப்பட்டுள்ளனர். மிக சிறியளவில் (3%) பெண்கள் நெருப்பினால் உடம்பில் சூடு வைக்கப்படும் கொடுமைபடுத்தப்பட்டும் சந்தர்பங்களும் உள்ளன. சிகரட், இரும்புக் கம்பி, கத்தி போன்ற பொருட்கள் இதற்காக உபயோகிக்கப்பட்டுள்ளன. இதேயளவில் சில பெண்கள் கட்டி வைத்தும் தமது பெற்றோர்கள், உறவினர்களை பார்க்கக் கூட முடியாமல் வீட்டுக்குள் அடைக்கப்பட்டும், தனிமைப் படுத்தப்பட்டும் துன்புறுத்தப்பட்டுள்ளனர். வன்முறையின் நீட்சியாக சிலபோது பெண்களுக்கு மூச்சுத் திணரலும் ஏற்பட்டுள்ளது இன்னும் சில சமயம் கொலை முயற்சியாகவும் அமைந்துள்ளது. இப்பெண்கள் தமது கஷ்டங்களை எவறிடமும் கூறவும் முடியாமலும் தப்பித்து ஓடவும் முடியாதளவு மிகுந்த சிரமத்தை அனுபவித்துள்ளனர் என்கின்றனர். உடலளவில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தக்கதான இச்செயற்பாடுகள் காயங்கள், தழும்புகள், உறுப்புக்கள் செயலிழப்பு, தொற்று நோய்கள், தீராத நோய்கள், பாலியல் நோய்கள், சுவாசப் பிரச்சினைகள், நரம்பியல் பிரச்சினைகள், இன்னும் பல விதமான உடலியல்சார் பாதிப்புக்கள் என்பனவற்றை வழிகோலியுள்ளன. கர்ப்பிணி பெண்கள் மீதான இத்தகைய வன்முறைகள் சிலபோது கருச்சிதைவுக்கும் இட்டுசென்றுள்ளமை சைனப் அல்வானி (Alwani, 2016) ஆய்வின் முடிவினை உறுதிசெய்கின்றது எனலாம். இந்த உடலியல் ரீதியிலான வன்முறைகளின் உளவியல் தாக்கமும் பிரதானமாக குறிப்பிடத்தக்கது.

**வரைபடம்-1: வன்முறையின் வடிவங்கள்**




*மூலம்: அளவையல் ஆய்வு 2020*

கட்டாயப்படுத்தி உடலுறவு கொள்ளல் (Maria & Alfonso, 2006; Arizona Coalition, 2019) எனும் பாலியல் ரீதியிலான வன்முறைகளால் இப்பிரதேச முஸ்லிம் பெண்கள் மிக குறைவாகவே (3%) பாதிக்கப்பட்டுள்ளனர். இது இலங்கையில் இத்தகைய வன்முறை ஒப்பிட்டளவில் மிகக் குறைவு எனும் வத்சலா (ஜெயசூரிய, *2011*) ஆய்வின் கண்டறிதலை பிரதிபலிக்கின்றது. கணவனின் உடலியல் தேவையை நிறைவேற்றுவது மனைவியின் கடமை எனினும் அவளை கட்டாயப்படுத்தி உடலுறவு மேற்கொள்வது தாம்பத்திய கற்பழிப்பாகக் கருதப்படும். அபிவிருத்தியடைந்த சில நாடுகளில் தாம்பத்திய கற்பழிப்பு தண்டனைக்குரிய குற்றமாகும் (WHO, 2005).


ஆய்வுக்குட்பட்ட பிரதேசத்தின் முஸ்லிம் குடும்ப் பெண்களுக்கு எதிரான பொருளாதார ரீதியான வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. ஆய்வுகள் (Roxanne, 2019; Unicef, 2000) அடையாளப்படுத்தும் அன்றாடத் தேவையை முடக்கல், பொருளாதாரச் செலவைக் குறைத்தல், மனைவியை வேலைக்கு அனுப்பாமல் தடுத்தல் அல்லது தற்போது செல்லும் வேலைக்கும் போக வேண்டாமென்று வலுக்கட்டாயப்படுத்தல், மனைவியின் விருப்பத்திற்கு ஏற்ப பொருட்களை தெரிவு செய்யவிடாது தடுத்தல், உரிமைகளை முடக்குதல் மற்றும் சீதனம் கேட்டு கொடுமைப்படுத்தல் முதலான வடிவங்களை ஒத்ததனவாக அவைற்றைக் கொள்ள முடியும். இந்த வகையில் கனிசமான பெண்களுக்கு (27%) அடிப்படைத் தேவை இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறையுள் என்பவற்றை கொடுக்க வேண்டிய கணவனின் கடமை தவறவிடப்பட்டுள்ளது. தங்கி வாழும் நிலையுள்ள மனைவியர் வீட்டு செலவிற்கு தேவையான பணம் பெறமுடியாமல் அலங்கயிக்கப்பட்டுள்ளனர். மேலும் பெற்றோரிடமிருந்து பணம் கொண்டு வரும் படி சில பெண்கள் (8%) பேர் வற்புறுத்தப்பட்டுள்ளமை அவர்களுக்கு எதிரான பொருளாதர ரீதயிலான வன்முறை பாட்பட்டது. அவ்வாறு பணம் கொண்டுவராதவர்களை் தாக்கப்பட்டு காயப்படுத்தப்படும் சந்தர்ப்பம் உடலியல் ரீதியிலான வன்முறையாக பரினமிக்க செய்கின்றது. வறுமை, தொழிலின்மை, வீடின்மை மற்றும் அதிகரித்த கடன் சுமை போன்றன பொருளாதார ரீதியிலான வன்முறைகளுக்கு ஏதுவான நிலைமையை மேலும் மோசமடையச்செயகின்றது எனலாம். பொருளாதார வன்முறை சமூக மட்டத்தில் புறக்கணிக்கப்பட்டு ஒதுங்கி வாழும் நிலைக்கு பெண்களை ஆக்கி தமது அன்றாடத் தேவைகளுக்காக சிலரிடத்தில் தங்கி வாழும் நிலையையும் ஏற்படுத்திவிடுகின்றது. மேலும் வன்முறைக்குள்ளான பெண்கள் தமது பொருளாதாரத் தேவைகளை சமாளிப்பதற்கு பாரிய கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியேற்படுகின்றது. இந்நிலையில் அவர்கள் தமது குழந்தைகளை வளர்ப்பதற்கும் பாதுகாப்பதும் பாரிய சிக்கல்களை எதிர் கொள்வது என மெலினா (Melinda, 2019) குறிப்பிடுவது போல இன்னும் சொல்லப்படாத பல பாதிப்புக்களையும் அனுபவிக்கும்படி ஆகிவிடுகிறது. வரைபடம் *1* ஆய்வுக்கு உட்பட்ட பிரதேசத்தில் அனைத்து வகை வன்முறை வடிவங்களில் நேர்வு நிலை வீதத்தை காண்பிக்கின்றது.

உடல், உள, பொருளாதார, பாலியல் மற்றும் வாய்மொழி ரீதியிலும் வன்முறைக்கு உட்படும் பெண்கள் அடையும் உடல், உள, பொருளாதார மற்றும் சமூக ரீதியிலான பாதிப்புகள் அவர்களையும் தாண்டி சார்ந்தோரையும் பீடித்துக் கொள்வதாக தரவுப் பகுப்பாய்வு தெரிவிக்கின்றது. இந்த வகையில் வன்முறைக்கு உற்படுத்தப்பட்ட பெண்களின் குழந்தைகள் மற்றும் ஏனைய குடும்ப உறவுகளும் உள்ளங்கின்றனர். தாய் வன்முறைக்கு உற்படுத்தப்படும் போது அவளின் பிள்ளைகளும் அதில் பாதிப்படைகின்றமை குறிப்பிடத்தக்கது. உடலியல் ரீதியில் காயங்களாக அன்றி அவர்களின் மனதளவிலான பாதிப்பு ஏற்படுகின்றமை அவர்களின் நடத்தைகளிலும், மனவெழுச்சி விருத்தியிலும் பிரச்சினையை ஏற்படுத்தவல்லன. ஆய்வுகளில் (றியால், *2014*; Sternberg, 1993) குறிப்பிடப்பட்டது போல் சில சமயம் அவர்களையும் வன்முறையாளர்களாக மாற்றிவிடும் அபாயத்தைக் கொண்டது. இது தவிர இந்த பிள்ளைகள் முறையாகக் கல்வி கற்பதற்கும் தமது அன்றாட தேவைகளை முழுமையாகப் பெற்றுக் கொள்வதற்கும் தமது எதிர்காலத்தை சீரமைத்துக் கொள்வதற்கும் வீட்டு வன்முறை தடையாக இருந்து அவர்கள் மத்தியில் எதிர்மறையான பாதிப்பை ஏற்படுத்துகிறது. உலகில் *40* வீதமான பிள்ளைகள் தமது பெற்றோர்களினால் வன்முறைக்கு ஆளாக்கப்படுகின்றனர் என்றும் அதிலும் குறிப்பாக சிறு பிள்ளைகளின் உள நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தி அவர்களது உணர்ச்சி நிலை சீராக வளர்ச்சி பெறுவதற்கும் தடையாக அமைந்துள்ளது என யுனிசெப் (Unicef, 2006) ஆய்வரிக்கை விபரிக்கின்றது. மேலும் தாழ்வு மனப்பான்மை, குற்ற உணர்வு, ஒதுங்கி வாழுதல்,

வெறுப்பு போன்ற நிலைகளை பிள்ளைகள் அடைகின்றனர் (Life line, 2016; Sternberg, 1993). இதனால் கொழும்புப் பிரதேச முஸ்லிம் பிள்ளைகளின் கல்வி நிலை சற்று பின்தங்கியுள்ளதான அவதானக் குறிப்புகள் இதனை உறுதிசெய்வனவாக உள்ளன.

குடும்ப வன்முறைச் சம்பவங்களின் மூலம் பாதிக்கப்பட்ட பெண்கள் ஏனய உறவுகளுடனான தொடர்பில் பல பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. குடும்பத்தினரிடம் சரளமாக உரையாடுதல் மற்றும் அவர்களுடன் சுமுகமாக முகம் கொடுத்து பேசுதல் தடைபடுதல், குடும்ப நிகழ்வுகளில் இருந்து ஒதுங்குதல், உறவுகளில் விரிசல் ஏற்படல், பாதிக்கப்பட்டவரை உறவுகள் விட்டு தூரமாதல் அல்லது விலகுதல் என்பன இடம்பெறுகின்றமை லைப்லைன் (Life line, 2016) கண்டறிதல்களை பிரதிபலிக்கின்றது. மேலும் சுமுகமான குடும்ப உறவுகளை தொடர்வதற்கும், அமைதியான குடும்பச் சூழலை மேம்படுத்துவதற்கும் குடும்ப வன்முறையானது பொரும் தடையாக அமைந்து விடுகிறது. மாறாக, குடும்ப உறவுகளை சரி செய்து கொள்வதற்கும் பயமான நிலைகளையும் ஏற்படுத்தியுள்ளன எனலாம். இத்தகைய வீட்டு வன்முறையானது சமூக பாதிப்பை ஏற்படுத்தும் பாரிய நோயா அமைந்தவிடுகிறது. சமூக செயற்பாடுகளில் பாதிப்பை விளைவிக்கும் இவ்வகையான வன்முறைகள் மிகவும் ஆபத்தானது எனும் மார்ஜியின் (Marjie, 2015). வாதம் நோக்கத்தக்கது. அதிகரித்து வரும் வீட்டு வன்முறைகள் மூலம் சமூக மட்டத்தில் கலாசார. ஒழுக்கம் சார்ந்த தளங்களில் நெறிபிறழ்வுகள் ஏற்படுகின்றன எனும் மரின்டாவின் (Malinda, 2019) கருத்து இதனை மேலும் உறுதிசெய்கின்றது. வீட்டு வன்முறை சமூக உறுப்பினர் ஒருவரையும் அவருடைய பெறுமதிகளையும் இழக்க நேரிடுகிறது. குறிப்பாக கொழும்பு வாழ் சேரிப்புற மக்களின் வாழ்க்கையை அதற்கு எடுத்துக் காட்டாக கொள்ள முடியும். இங்குள்ள முஸ்லிம்களின் கலாசார, பண்பாட்டு பின்னடைவு முஸ்லிம் சமூகத்தினதும், அதன் அபிவிருத்தியிலும் பின்தங்கிய நிலையை ஏற்படுத்திவிட்டுள்ளது எனலாம். வன்முறைக்குள்ளானவர் அதிகம் பாதிக்கப்பட்டவர்களாகவும் உதவியற்றவர்களாகவும் ஆகிவிடுகின்றனர். இதனால் அவர்கள் சமூக வாழ்வினை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு செய்வதில் தோல்வியடைகின்றனர் றியாலின் (2014) குறிப்பு ஏற்புடையது.

**வரைபடம்-2: வன்முறை பாதிப்புகள்**




*மூலம்: அளவையல் ஆய்வு 2020*

இவ்வகையான வன்முறைகள் தோற்றுவிக்கும் சமூக தாக்கம் கருத்தில் கொள்ளவேண்டியது. ஊண்மையில் உடலியல், உளவியல், பொருளாதார விடயங்களின் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தனி நபரினதும் பின்னடைவு முழு சமூகத்திற்குமான பாதிப்புக்களாக கருததக்க சமூகத்தின் பின்னடைவாகவும் கொள்ளப்படுகின்றது. வன்முறையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றமையும் சமூகத்தின் வளர்ச்சிப் போக்கில் தாக்கம் செலுத்துகின்றது. வன்முறைக்கு உற்படுத்தப்பட்டவர்களை பாதுகாப்பதும் அவர்களுக்கான மறுவாழ்வை அளிப்பதும் வன்முறைகளை கட்டுப்படுத்துவதும் சமூகத்தின் மீதுள்ள பாரிய பொறுப்பாகும். இதற்காக சமூகமானது பெரும் பொருளாதாரத்தை செலவழிக்க வேண்டியுள்ளது. மேலும் குழந்தைகள் பாதிப்படைவதால் சமூகத்திற்கான ஆளுமைமிக்க நற்பிரஜைகளை உருவாக்குவது தடைபடுகின்றது எனும் (Sternberg, 1993) வாதம் நோக்கதக்கது. ஒரு நாட்டினுடைய அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் வன்முறைகள் தாக்கம் செலுத்துகின்றன. அடிப்படை மனித

உரிமை மீறலான இது பற்றிய தகவல்கள் வெளிவரப்பட்டு வன்முறைகளை முற்றாக ஒழிக்க வேண்டும் என ஒவ்வொருவரும் கருசனை கொள்கிறனர்.

வரைபடம் 2 காண்பிக்கின்றவாறு ஆய்வு பிரதேசத்தை சேர்ந்த முஸ்லிம் பெண்களில் உளவியல் ரீதியில் பாதிப்படைந்தவர்களே ஒப்பீட்டு ரீதியில் மிக அதிகமாகும் (58%). இது தவிர உடலியல் ரீதியிலும் பாதிக்கப்பட்டவர்களும் கனிசமானவர்களாக (31%) அதேவேளை சிலர் (9%) பொருளாதார ரீதியிலும் வெகுசிலர் (2%) பாலியல் ரீதியிலும் பாதிப்படைந்துள்ளனர் என்பது வன்முறை பாதிப்பின் நீட்சியை காண்பிக்கவல்லது. பெண்ணானவள் வாழ்வதற்கான அனைத்து வித உரிமைகளையும் பெற்று, அவள் ஆணைப்போல சமமாக மதிக்கப்பட வேண்டும் எனவும், பெண்களும் ஆண்களும் சரிசமன் எனவும் பல கோட்பாடுகள் உள்ள போதும் வன்முறையால் பாதிப்படையும் பெண்கள் எல்லா சமூகத்திலும் உள்ளனர். பெண்கள் மீதான இஸ்லாத்தின் கரிசனை, அவர்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள் தொடர்பில் இஸ்லாத்தை மார்க்கமாகக் கொண்ட முஸ்லிம்கள் அதிகம் சிரத்தை காட்ட வேண்டியுள்ளது. இந்த நிலையில் முஸ்லிம் குடும்பங்களில் இவ்வகையான வீட்டு வன்முறைகள் இடம் பெறுவது இஸ்லாமிய இலட்சியப் பண்புக்கு புறம்பானது. இவ்வாறான வன்முறைகளின் பாதிப்புக்களில் குடும்பங்கள் சிதைவடைகின்றமை உள்ளது. கொழும்புப் பிரதேசத்தில் முஸ்லிம் குடும்பங்களில் நிகழும் வீட்டு வன்முறையின் பாதிப்புக்களினால் பல பெண்கள் பஸ்ஹ் விவாகரத்து பெற்றுள்ளனர் என்பதும் அது வருடாவருடம் அதிகரித்துச் செல்கிறது என்பதும் கண்டறியப்பட்டது (அட்டவணை 1).

**அட்டவணை 1: பஸ்ஹ் விவாகரத்து விபரம்**

| ஆண்டு | விண்ணப்பிக்கப்பட்ட பஸ்ஹ் விவாகரத்துக்கள் |
|---|---|
| *2018* | *290* |
| *2019* | *298* |

*மூலம்: காழி நீதிமன்ற ஆவணம்*

வன்முறைகளற்ற குடும்பத்தைக் கட்டியெழுப்புவது இஸ்லாத்தின் எதிர்ப்பார்ப்பாகும். ஒவ்வொரு முஸ்லிம் குடும்பமும் சீரமைக்கப்படுவதன் மூலமே இஸ்லாமிய சமூகம் எழுச்சி பெறும். முஸ்லிம் குடும்பங்களில் இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் நிகழ்வது முழு முஸ்லிம் சமூகமும் பின்னடைவை சந்திக்கும் நிலை ஏற்படலாம். குறிப்பாக தலைநகரப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம் குடும்பங்கள் நாட்டினுடைய முன்னேற்றத்திலும் அபிவிருத்தியிலும் நேரடிப் பங்காளர்களாக செயல்பட வேண்டியவர்கள். வன்முறைகள் நிகழ்வுகள் வீதத்துக்கு ஏற்ப விவாகரத்துக்களும் அதிகரிக்கின்றன. இதனால் விவாகரத்து பெற்ற பெண்களின் எண்ணிக்கை உயர்வடைவதுடன், தாய் அல்லது தந்தையின் அரவணைப்பற்ற பிள்ளைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படுகின்றது. மேலும் விவாகரத்துப் பெற்ற பெண்கள் தமது வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொள்ள தொழில் ஒன்றை செய்யும் நிலை ஏற்படுகிறது. இதனால் சமூகத்தில் முஸ்லிம் பெண் தொழிலாளர்களும் அதிகரிப்பதுடன் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தலைப்படுகின்றன. அதுபோல இஸ்லாமியக் குடும்பச் சூழலை முறையாகப் பேணுவதற்கு வன்முறைகள் பெரிதும் தடையாக அமையும். இது இஸ்லாமிய சமூகத்தினதும் முஸ்லிம்களினதும் முன்னேற்றத்திற்கு பெறும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இதுபோல எல்லா சமூகத்திலும் பூட்டப்பட்ட வீடுகளுக்குள்ளே வெளிப்படையாகவே அல்லது மறைமுகமாகவே வன்முறைகள் இடம் பெறுகின்றன. கணிசமானளவு குடும்பங்களைக் கொண்ட தலைநகரப் பகுதிகளில் வன்முறைகளின் தன்மைகளும், வகைகளும் அதிகம் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய அம்சமாகும்.

## 4. முடிவுரை

இவ்வாய்வானது கொழும்பு பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் இடம் பெறும் குடும்ப வன்முறைகளையும், வன்முறையால் அப்பெண்கள் எதிர்கொள்ளும் பாதிப்புக்களைப்

பரிசீலிக்கின்றது. கொழும்பு பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் வீட்டு வன்முறைச் சம்பவங்கள் இடம் பெறுவது என்பது கண்டறியப்பட்டுள்ளது. உடல் ரீதியிலான வன்முறைகளாக அடித்தல், சூடு வைத்தல், கட்டி வைத்தல், பொருட்கள் கொண்டு அடித்தல், கழுத்தை நெறித்தல் என்பன காணப்படுவதுடன், உள மற்றும் வாய்மொழி ரீதியிலான வன்முறைகளாக கடுமையாக ஏசுதல், அவதூறு கூறல், உதாசீனப்படுத்தல், நடத்தைக் கட்டுப்பாடு மற்றும் புறக்கணித்தல் என்பன காணப்படுகின்றன. அத்துடன் பொருளாதார ரீதியிலான வன்முறைகளாக அடிப்படைத் தேவைகளை இல்லாமல் செய்தல், பெற்றோரிடம் பணம் கொண்டுவரும் படி வற்புறுத்தல் என்பன அடையாளப்படுத்தப்பட்டன. மேலும் குறைந்தளவான பாலியல் வன்முறைகளும் இடம் பெற்றுள்ளன. இவை அப்பிரதேச முஸ்லிம் பெண்கள் மத்தியில் உடல், உள, பொருளாதார மற்றும் சமூக ரீதியிலும் பல பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறான சூழ்நிலையினால் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டு ஒதுங்கி வாழுதல், தேவைகளுக்காக பிறரிடம் தங்கி வாழுதல் போன்ற நிலைக்கும் பிரதேச முஸ்லிம் பெண்கள் தள்ளப்பட்டுள்ளனர். இவற்றில் பெருமளவில் உளவியல் தாக்கங்களே அதிகம் என கண்டறியப்பட்டது. மேலும் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட தனிநபர்கள் மட்டுமன்றி அவர்களது குழந்தைகளும் உடல், உள ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அது சமூகத்தினதும் நாட்டினதும் முன்னேற்றத்தையும் பாதிக்கின்றன. வன்முறையின் காரணமாக அதிகளவான முஸ்லிம் பெண்கள் பஸ்ஹ் விவாகரத்துக்களை நாடிச் சென்றுள்ளனர். இதன் சமூக பாதிப்பின் வெளிப்பாடாகும்.

இவ்வாறு பாதிப்படைந்த பெண்களை வன்முறையிலிருந்து மீட்பதும் அவர்களுக்கு தேவையான ஏனைய உதவிகளைச் செய்வதும் முஸ்லிம் சமூகத்தின் கடமையாகும். கொழும்புப் பிரதேச முஸ்லிம் குடும்பங்களின் வன்முறையை அதன் பாதிப்பை இலகுவாக்குவதற்கு இஸ்லாமிய குடும்ப அமைப்புப் பற்றிய போதனைகள் முறையாக வழங்கப்பட வேண்டும். இதற்கு அப்பிரதேச ஜமாத் அமைப்புக்கள் முன்வந்து இஸ்லாமிய குடும்ப அமைப்பின் முக்கியத்துவம் பற்றி தெளிவுப்படுத்த வேண்டும். வன்முறைக்குள்ளான முஸ்லிம் பெண்களை இனங்கண்டு அவர்களுக்கு தேவையான வாழ்வாதார வசதிகளை செய்து கொடுக்க முஸ்லிம் தனவந்தர்கள் முன்வர வேண்டும். அத்துடன் குடும்ப வன்முறை ஒழிப்புச் சட்டத்தை கடுமையாக வலுப்படுத்த வேண்டும். அதாவது பாதிக்கப்பட்டவரை காப்பாற்றுவது மட்டும் நோக்கமாக கொள்ளாது வன்முறையாளருக்கு தண்டனை கொடுக்க வேண்டும். மேலும் முஸ்லிம் குடும்பங்களில் வன்முறை செயற்பாடுகளை அறிந்து கொள்ள பிரத்தியோகமான தொலைபேசி, இணையத்தள இலக்கங்கள் அவசியம். இவ்வகையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் போது வன்முறைகள் தடுக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியையும் பெற்றுக் கொடுக்க முடியும்.

## உசாத்துணைகள்

Achini, C., Jayathilaka., Krishna. & Junko, Y. (2010). Intimate Partner Violence in Srilanka. Retrieved (2019.10.4). from: http;//w.w.w.semanticscholar.org

Arizona Coalition. (2019). What is Domestic Violence. Retrieved (2019.10.4). from:http;// w.w.w.acesdv.org.

Azizah, H. (2003). An Islamic Perspective on Domestic Violence. Retrieved (2019.10.4). from: http;//w.w.w.heinoline.org

Darrel Pyne, Linda Wermelng. (2009). Domestic Violence and The Female Victim; The Real Reason Women Stay. Retrieved (2019.10.4). from: http;//w.w.w.citeseerx.ist.psu.edu

Douki, S., Nacef, F., Bousker, A. & Ghachen, R. (2003). Violence Against Women in Arab and Islamic Countries. Retrieved (2019.10.5). from: http;//w.w.w.link.springer.com

Gwenneth, L. Robert. (2003). The Impact of Domestic Violence on Women's Mental Health. Retrieved (2019.10.5). from: http;//w.w.w.bookgoogle.lk

Jeanne, M. (2006). Young Women Suicide in Srilanka; Cultural, Ecological and Psychological Factores. Retrieved (2019.10.5). from: http;//w.w.w. reseachgate.net

Johnson, M.P. (2010). Intimate Terrorisum, Violence Resistance and Situational Couple Violence. Retrieved (2019.10.5). from: http;//w.w.w.bookgoogle.lk

Dukess, Karen. (2006). Some of the Biggest Victims of Domestic Violence are the Smallest. Unicef. Retrieved (2019.10.4). from: http;//w.w.w.unicef-org

Life Line. (2016). Family Violence. Retrieved (2019.10.4). from:http;//w.w.w.Lifeline.org.au Maria, A. Alfonso, P. (2006). The Impact of Psysical, Psycological and Sexual Intimate Male Partner Violence on Women's Mental Health; Depressive Symptoms, Posttraumtic Stress Disorder, State Anxiety and Suicide. Rliebertpub.cometrieved (2019.10.5). from: http;//w.w.w.

Melinda. (2019). Domestic Violence and Abuse. Retrieved (2019.10.5). from: http;//w.w.w. Helpguid.org.

Marjie, L. (2015.10.15). We Need to Talk about Domestic Violence in our Community.Retrieved (2019.10.5). from: http;//w.w.w.google.com

Mehr Khan. (2000). Domestic Violence Against Women and Girls. Unicef, Italy. Retrieved (2019. 10 .4). from: http;//w.w.w.unicef-irc.org

Nuzila, I. (2017). The Role of Islam in Preventing Domestic Violence Towards Muslim Women in Azerbaijan. Retrieved (2019.10.5). From ; http;//w.w.w. deripark.org

Parliament of the Democratic Socialist Republic. (2005). *Prevention of Domestic Violence Act*. (Gezette 2005, October 07). Srilanka. Retrieved (2019.10.4). from: http;//w.w.w.wcwonline. org/pdf/lawcompliation/srilanka

Padmini, S. & Sivagurunathan, S. (2001). The Prevalence and Patternof Wife Beating in The Trincomalee District in East Sri Lanka.

Roxana. (2019). Domestic Violence. Retrieved (2019.10.5). from:http;//w.w.w. medicinenet.com

Sternberg & Kathleen. (1993). Effects of Domestic Violence on Children's Behavior Problems and Depression. Retrieved (2019.10.4) From ; http;// w.w.w. psycnet.apa.org

Unicef. (2000). Domestic Violence. Retrieved (2019.10.4) From ; http;// w.w.w. unicef.com

Unicef. (2006). Behind the Closed Door. Retrieved (2019.10.4) From ; http;// w.w.w. unicef.com

United State Attorney, V. W. A. Unit. (1998). Understanding Domestic Violence: A Handbook for Victims and Professionals: U.S. Department of Justice, Office of the United States Attorney, District of Columbia.

UN Women, (2019). Ending Violence Against Women. Retrieved (2019.10.5). from: http;// w.w.w. unwomen.org

Vathsala, J., Kumuda, W. & Pia Axemo. (2001). Intimate Partner Violence Against Women In Capital Province of Sri Lanka; Risk Factors And Help Seeking. Retrieved (2019.10.6) From; http;//w.w.w.researchgate.net/publication

WHO. (2017). Violence Against Women. Retrieved (2019.10.6) From ; http;// w.w.w.who.int

WHO. (2005). Multy- Country Study on Women's Health and Domestic Violence Against Women. Retrieved (2019.10.6) From ; http;//w.w.w.booksgoogle.lk

Zainab Alwani, (2016). Domestic Violence; Islamic Prespective. Retrieved (2019.10.6) From; http;//w.w.w.researchgate.net/publication

கலையரசன், கா. (2003). *திருமண பந்தத்தில் கணவன்- மனைவி*. இறக்காமம், மறுமலர்ச்சி.

கமலினி, க. (2011). பால்நிலைக் கருத்தியலும் பெண்களுக்கெதிரான வன்முறையும் .*பெண்.* மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்.

சுஹீரா, எஸ். (2016). *அடிப்படை சமுகவியல் எண்ணக்கரு.* (2ம் பதிப்பு). அக்கறைப்பற்று: Socio Political Study Circle.

பத்மநேசன். (2002). பெண்களுக்கெதிரான வன்முறை. *பெண்.* மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்.

பெண்கள் வாரியம், (2019). பெண்கள் பாதுகாப்பு மற்றும் ஆதரவு. Retrived (2019.10.10) from http;//w.w.w. 211tpronto.ca.topic.

பௌசுல், எம். பி. (2015). பெண்களை வழிப்படுத்த ஆணாதிக்கத்தை தவிர்த்து அறிவுரைப் பகருங்கள். *உண்மை உதயம்.* பரகஹதெனிய: ஜமாத் அன்ஸாரி சுன்னதுல் ஹம்மதிய்யா.

மஸாஹிர், எஸ்.எம்.எம். & இஸ்மியா பேகம், எம்.எஸ். (2017). *இஸ்லாம் நம்பிக்கைகளும் கோட்பாடுகளும்.* கொழும்பு: அல்ஹத.்.ப் பதிப்பகம்.

றியால், ஏ.எல்.எம். (2014). பெண்கள் எதிர்கொள்ளும் வீட்டு வன்முறை: விளக்கமும் மீளாய்வும். *Journal of Social Review.* Retrieved (2019.10.4) From;http;//w.w.w.seu.ac.lk

ஹில்பான், எம்.எல்.எம். & ஜெஸீல், எம்.ஐ.எம். (2018). முஸ்லிம் குடும்பங்களில் நிலவும் உள்ளக பிரச்சினைகள்: மட்டக்களப்பு தேர்தல் தொகுதியை மையப்படுத்திய கள ஆய்வு. Srilanken *Journal of Arabic and IslamicStudies*, Retrieved (2019.10.4) From http; //w.w.w. seu. ac.lk

தினகரன். (2018, ஒக்டோபர் 7). வன்முறை என்பது வெறும் உடல் தாக்கமல்ல. Retrived (2019.10.5) from தினகரன் : http;//w.w.w.varamanjari.lk

மாஜிதா. (2002). இலங்கையில் வீட்டு வன்முறைச் சட்டம். *பெண்.* மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

ரமீஸ், ஆர். (2016, ஒக்டோபர் 13). பூட்டப்பட்ட கதவுகளுக்குள்ளே: இலங்கையில் வீட்டு வன்முறை. Retrived (2019.10.5) from : http;//w.w.w.roar.media.com

ராதிகா. (2001). பெண்கள் வன்முறைக்க உற்படாத சமூகம். *பெண்.* மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்.

ரியால், எம். (2012). நவீன இஸ்லாமிய குடும்பம் எதிர்கொள்ளும் சவால்கள். Retrieved (2019.10.4) from; http;//w.w.w.kalvivali. blogspot. com